***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.179/2019 – P.W. 2 (LW4)***

| | |
|---|---|
| *Name* | அழகர்சாமி |
| *Father/Husband's Name* | வரதராஜன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 45 |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.08.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பழக்கடை வைத்துள்ளேன்.

2. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் , வருடம் ஞாபகம் இல்லை. இரவு 07.15 மணியளவில் செயின் ஜோஜப் கான்வெண்ட் அருகே திருத்துறைப்பூண்டி ரோட்டில் ஒருவர் இடது ஓரமாக இருச்சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தவர் மீது அதே ரோட்டில் பேப்பர் வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்படுத்தியது இது தொடர்பாக மறுநாள் காலை 07.00 மணியளவில் சம்பவ இடமான விபத்து நடந்த இடத்தை மன்னார்குடி நகர போலீசார் பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் காலை 07.00 மணிக்கு தான் கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரில் கையொப்பம் தான் செய்தேன். அதில் உள்ள விபரம் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கையொப்பம் இடவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Sd/--J.Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.